பக்கங்கள்:-15

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவ ஆண்டு 2054 | ஆடி 18 | வியாழக்கிழமை | 03.09.2023 | அதிர்வு 02

## தேர்தல் என்றாலே ரணிலுக்கு அலர்ஜி

### மனோ கணேசன் கிண்டல்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம்,ஒக.03

தேர்தல் என்றாலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அலர்ஜி எனத் தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு 06

# '13' தொடர்பில் 15 ஆம் திகதி திரும்பவும் சர்வகட்சி மாநாடு

## ஜனாதிபதி ரணில் தலைமையில் நடக்கும்



மாகாண சபைகளுக்கு அதிகாரத்தை வழங்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சர்வகட்சி மாநாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மீண்டும் கூடவுள்ளது. அதற்கான அழைப்பு சர்வகட்சிகளுக்கும் நேற்று அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் 15 ஆம் திகதி மாநாடு நடத்தப் படவுள்ளது. 06

## வவுனியா இரட்டைக்கொலை சந்தேகநபர்களுக்கு மறியல்!

வவுனியா – தோணிக்கல் வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் 11 ஆம் திகதி வரை அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கவும், மீண்டும் 11ஆம் திகதி ஆள்அடையாள அணி வகுப்புக்காக 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவும் நீதிவானால் நேற்று உத்தரவிடப்பட்டது.

இதேவேளை, மன்றில் 4ஆம் சந்தேகநபர் தனது கருத்தைத் தெரிவிக்க முற்பட்டபோது, “இன்று உங்கள் கருத்தைத் தெரிவித்தால் உங்களுக்கி 11

## 13 குறித்த அடுத்தகட்ட நகர்வு என்ன? நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பு

### – தயாராகுகின்றார் ஜனாதிபதி

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுகள் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க இந்தத் தகவலை நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தியாவும் இதற்கான அழுத்தத்தைப் பிரயோகித்து வருகின்றது. 06



## பழைய பல்லவியைப் பாடியபடி பார்த்திருக்கிறது பாரத தேசம்

### அதைப் புரிய வேண்டும் என்கிறார் மனோ கணேசன்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், ஒக.03

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டு வரப்பட்ட 13 ஆவது திருத்தம் இத்தனை ஆண்டுகளாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதையும், இணைப்பட்டிருந்த வடக்கு – கிழக்கு பிரிக்கப்பட்ட போதும் சரி, அதில் மாகாணங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களை இலங்கை அரசாங்கம் 03

### ஆள்கடத்தல் முயற்சி முறியடிப்பு

## இலங்கையர்கள் 43 பேர் ஜோர்தானில் அந்தரிப்பு

ஜோர்தானிலிருந்து மேற்குக் கரையூடாக வேறு நாடொன்றுக்கு இலங்கையர்கள் 43 பேரைச் சட்ட விரோதமாகக் கடத்தும் முயற்சியை அந்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினர் முறியடித்துள்ளமையுடன் நான்கு இடைத்தரகர்களைக் கைதும் செய்துள்ளனர்.

இலங்கையிலிருந்து சுற்றுலா விசாவில் 43 பேரும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களை அழைத்துச் சென்றவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று ஜோர்தானியர்களும் பாலஸ்தீனர் ஒருவரும் 11

## இரகசியம்



“வித்தி கொண்டு வந்த செய்தியை ரணில் விக்கிரமசிங்க கேட்டிருந்தால் 2005 இலேயே அவர் ஜனாதிபதியாகியிருப்பார்” – என்று நேற்று முன்தினம் “முரசு” மின்னிதழ் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றிய 02

## நாட்டில் சமஷ்டி வழங்கினால் இரத்த ஆறு ஓடாது மாறாக

# சமஷ்டி வழங்காவிட்டால் சிங்களவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடவேண்டி நேரும்!

## அதை விரைவிலேயே கம்மன்பில பார்ப்பார் என்கிறார் ரெலோ பிரமுகர் சபா குகதாஸ



சமஷ்டி வழங்கப்படா விட்டால் சிங்களவர் வெளிநாடுகளுக்கு ஓடுவதை விரைவில் பார்ப்பார் கம்மன்பில என வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும் ரெலோ பிரமுகருமான சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

சமஷ்டித் தீர்வைத் தொடர்ந்து வலியுறுத்தினால் மீண்டும் இரத்த ஆறு ஓடும் என வழமையான பாணியில் இனவாதத்தை ஊடகங்களில் கக்கியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில.

தென்னிலங்கையில் குறிக்கப்பட்ட சிங்கள மக்களைத் தங்கள் பக்கம் திருப்பி தங்கள் நாடாளுமன்றக் கதிரைகளைத் தொடர்ந்தும் சூடாக்க இனவாதக் கருத்துக்களை கம்மன்பில உள்ளிட்ட சிலர் பயன்படுத்த முனைவதன் வெளிப்பாடே தமிழர்களின் அபிலாஷைகளை, ஜனநாயக வெளிப்பாடுகளை இனவாதமாக சித்தரித்தல்.

இது 1956 ஆண்டில் இருந்து இன்றுவரை இலங்கைத் தீவில் தொடர்கிறது. இதன் அறுவடையை 2019 ஆண்டின் பின்னர் நாட்டு மக்கள் அனைவரும் மிகப் பாரிய பொருளாதார பின்னடைவாகச் சந்தித்த கள யதார்த்தம் நாட்டைத் தொடர்ந்து மிகப் பாரிய பின்னடைவுக்குள் தள்ளியுள்ளது.

நாடு மீண்டெழ முடியாத நிலைக்குள் பொருளாதாரம் முடங்கி விட்டது. பிச்சை எடுத்தும் இருக்கும் நிலபுலங்களை விற்றும் படம் காட்டுகிறார் ஜனாதிபதி ரணில். இந்த நிலையில் மீண்டும் இரத்த ஆறு ஓடும் எனத் தமிழர்களை மிரட்டுவது கம்மன்பிலவின் அரசியல் வங்குரோத்தை வெளிப்படுத்தியுள்ளது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு சிங்கள ஆட்சியாளர் நிரந்தரத் தீர்வாக சமஷ்டியைக் கொடுக்கத் தவறினால் இன்னும் சிறிது காலத்தில் அன்று தமிழர்கள் சாரை சாரையாக வெளிநாடுகளுக்கு ஓடியது போல, தென்னிலங்கையில் சிங்களவர் வெளியேறுவதை கம்மன்பில பார்ப்பார்.

1952 ஆண்டில் இருந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் தங்களது அபிலாஷையாக ஜனநாயக ரீதியாக சமஷ்டித் தீர்வு வேண்டும் என்றே வடகிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மை தமிழ் மக்களின் ஆணை வழங்கப்பட்டது. அதை நிராகரிக்கும் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரம் ஒட்டுமொத்த நாட்டையும் மீண்டெழ முடியாத நிலைக்குத் தள்ளியுள்ளதை வெளிக்காட்டும் குறியீடாக தென்னிலங்கை சிங்களவர்கள் விரைவில் நாட்டை விட்டு ஓடுவார்கள்.



– இப்படி சபா குகதாஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

---

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

மனோ கணேசன் எம்.பி. தெரிவித்திருந்தார் அல்லவா?

அது என்ன செய்தி, அப்படி என்ன நடந்தது, அந்த செய்தியை ரணில் உதாசீனம் செய்து, அந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை வாங்கிக் கட்டிக் கொண்டமை எங்ஙனம், அதற்கு இப்போது ரணில் சொல்லும் சமாளிப்பு விளக்கம் யாது – என்பவை பற்றி எல்லாம் இன்று முதல் விவரிப்பேன் என நேற்றுக் குறிப்பிட்டு இருந்தேன் அல்லவா?

அந்த விடயங்களை எல்லாம் இயன்றவரை சுருக்கமாகத் தொடர்ந்து பார்ப்போம்.

அதற்கு, அப்போதைய அரசியல் களப் புறச் சூழலை ஒரு மேலோட்டமாக நோக்குவது அவசியம்.

2001 டிசம்பரில் நடைபெற்ற பொதுத் தேர்தல் மூலம் அதிகாரத்துக்கு வந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு, 2002 பெப்ரவரியில் விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து, நேரடி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தது. அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகாவே நாட்டின் முப்படைகளின் தளபதி. பிரதான தள கர்த்தர். ஆனாலும் அவருக்குக் காட்டாமலேயே –

அவரது அனுமதியின்றியே – புலிகளுடன் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து, அதனைத் தமது அரசுப் படைகள் மூலம் நடைமுறைப்படுத்தவும் செய்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தாய்லாந்து, ஜப்பான், நோர்வே, ஜெர்மன் என ஆறு இடங்களில் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுடன் நேரடி சமாதானப் பேச்சுகளை நடத்தியது ரணிலின் அரசு.

பேச்சுக்கு நடுவே வடக்கு – கிழக்குக்கு, அதாவது தமிழர் தாயகப் பிரதேசத்துக்கு என இடைக்கால அதிகார சபையை உருவாக்கும் யோசனைத் திட்டம் ஒன்றை 2004 ஏப்ரலில் பிரதமர் ரணிலின் பரிசீலனைக்கு ஒப்படைத்தது புலிகள் அமைப்பு.

அதைப் பிரதமர் ரணில் கையேற்று ஓரிரு நாள்களில், அதையே பூதாகர விவகாரமாக ஊதிப் பெருப்பித்துக் காட்டி, அதன் அடிப்படையில் ரணிலின் அரசைக் கலைத்து, வீட்டுக்கு அனுப்பினார் ஜனாதிபதி சந்திரிகா. அதை அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் சுதந்திர கட்சி அணி, மறுபக்கத்தில் இருந்த ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து, தேர்தலை எதிர்கொண்டு, வெற்றிவாகை சூடியது. அதனால் 2004 நடுப்பகுதியில் எதிர்க்கட்சியில் போய் அமர வேண்டியவரானார் ரணில்.

இச்சூழலில் 2006 நவம்பரில் அடுத்த ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட போது, திடீரென தனது அதிரடித் தீர்ப்பு ஒன்றின் மூலம் 2005 நவம்பரிலேயே அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு வழி செய்தார் அப்போதைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

தமது அரசின் கலைப்போடு, புலிகளுடனான பேச்சையும் ஊடாட்டத்தையும் நிறுத்திக் கொண்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு, 2005 ஜனாதிபதி தேர்தலில் தாம் களமிறங்குகின்றமையை அடுத்து தேர்தலுக்கு முன்னர் மீளப் புலிகளுடன் தொடர்பாடல் – ஊடாட்டம் – வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

அதற்காகத் தமது பிரதிநிதிகளை அனுப்பி புலிகளுடன் உரையாடலை ஆரம்பிக்கச் செய்வதற்கான பூர்வாங்க முயற்சியை ரணிலின் தரப்பு மேற்கொண்டது.

அவரது அலுவலர் இருவர் இதற்காக என்னுடன் தொடர்பு கொண்டனர்.

2005 ஜனாதிபதி தேர்தலுக்கு சில வாரங்களுக்கு முன்னர் ரணிலின் அந்தப் பிரதிநிதிகள் இருவரும் வன்னி சென்று புலிகளின் தலைவர்களுடன் நேரடியாகப் பேச விரும்புகின்றனர் என்ற செய்தி புலிகளின் தலைமையுடன் நெருங்கிய ஊடாட்டத்தை வைத்திருந்த பத்திரிகையாளன் என்ற முறையில் என் மூலம் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

என் கோரிக்கைக்கு அமைய புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் ரணிலின் பிரதிநிதிகளுடனான பேச்சுக்கு நேரம் ஒதுக்கி, தொலைபேசி மூலம் எனக்கு அவரே தகவல் தந்தார். சந்திப்புக்கு ஏற்பாடுகள் நடந்தன. ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் ரணிலின் அலுவலர்கள் வன்னி செல்லவில்லை. கடைசி நேரத்தில் ஜாகா வாங்கிக் காலைவாரி விட்டனர். ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லி, சந்திப்புக்கான வாய்ப்பைத் தள்ளிப் போட்டனர். ஒன்றுக்கு மூன்று தடவைகள் புதிய புதிய திகதிகளில் நேரம் ஒதுக்கப்பட்டன. ஒவ்வொரு தடவையும் ரணிலின் அலுவலகர்கள் ஒவ்வொரு காரணம் சொல்லிச் சந்திப்பைத் தவிர்த்தனர்.

சந்தித்துப் பேசுகிறோம், பேசுகிறோம் என்று கூறிக் கூறி, காலத்தை இழுத்தடித்து, தேர்தல் முடிவடையும் வரைப் புலிகளைச் சந்திக்காமல், விடயத்தை சமாளிப்பது ரணில் தரப்பின் நோக்கம் என்பது புலிகளுக்குப் புரிய ஆரம்பித்தது.

அதை அடுத்து அதிரடி நடவடிக்கை ஒன்றைப் புலிகள் எடுத்தனர். இப்படியாகும் என ரணில் பிரதிநிதிகளுக்கு நான் தெரியப்படுத்தியது போல, இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கும் வாக்களிக்க மாட்டார்கள், தேர்தலைப் பகிஷ்கரிப்பார்கள் என்று புலிகள் அதிரடி அறிக்கை தந்தனர்.

அதிர்ந்து போனார் ரணில். அந்த அறிவிப்பு வெளியான அன்று இரவு 10 மணிக்கு கொழும்பில் "சுடர் ஒளி" பத்திரிகை அலுவலகத்தில் ஆசிரியர் பணியில் இருந்த

(3ஆம் பக்கம் பார்க்க...)

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கரையும் பெரமுன...!

இலங்கை அரசியலில் 'கிழட்டு நரி' என்று விடுதலை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தினால் வர்ணிக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க. அவரின் அரசியல் நரி தந்திரோபாயம் பலராலும் அறியப்பட்டதுதான்.

யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகள், போக்குகள் குறித்து இங்கு விலாவாரியாக விமர்சித்து, பகிரங்கமாகப் பேசிச் சென்றிருக்கின்றார்.

அதில் ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரித்தாளும் தந்திரம் அல்லது சூழ்ச்சி பற்றிய விவகாரம் ஆகும்.

'ரணில் விக்கிரமசிங்க ஒரு கெட்டிக்காரன் என்பது எல்லோருக்கும் தெரியும். அதுவும் கெட்டிக்காரன் எதில் என்றால் பிரித்தாளுவதிலே மிகவும் கெட்டிக்காரன் அவர்தான். இவ்வாறு யார், யாரை அவர் பிரித்தார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது பொதுஜன பெரமுனவையும் பிரித்துவிட்டார். அந்தக் கட்சிக்குள்ளேயே ரணில் அணியொன்று உருவாகிவிட்டது.' - என்று அவர் கூறியிருக்கின்றார்.

மனோ கணேசன் மட்டுமல்லர், ரணிலின் பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாகிக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிக்கும் பிரமுகர்கள் பலரே தங்களது கட்சிக்கு ஜனாதிபதி ரணிலினால் நேர்ந்துள்ள கதியை - விபரீதத்தை - பார்த்து விக்கித்துப் போய் நிற்கின்றார்கள்.

இப்படி ரணிலின் தந்திரத்திற்கு பொதுஜன பெரமுன கட்சி கரைந்து போனாலும் அக்கட்சியைப் பொறுத்தவரை அது முற்பகல் செய்ததன் பிற்பகல் விளைவுதான் என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

*2015* பொதுத் தேர்தலில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேனாவின் தலைமையில் சுதந்திரக் கட்சி *96* உறுப்பினர்களுடன் நாடாளுமன்றுக்குச் சென்றது.

இப்போது பொதுஜன பெரமுனவைச் சுரண்டி, கரைத்து, அக்கட்சியில் இருந்து உறுப்பினர்களைத் தன் பக்கம் இழுத்து ஆள்திரட்டும் ரணிலின் நடவடிக்கை போலவே, அப்போது சு.கவிலிருந்து எம்.பிக்களை சுரண்டி, சூறையாடி, வளைத்துப் போட்டு உருப்பெற்றதுதான் இந்த பொதுஜன பெரமுனை என்பது மறுக்கப்படக் கூடியது அல்ல.

ஆனால், அன்றைய ஜனாதிபதி மைத்திரிக்கும், இன்றைய ஜனாதிபதி ரணிலுக்கும் இடையில் இது விடயத்தில் நிரம்ப வேறுபாடு உண்டு.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தானே ஜனாதிபதி என்ற உறுதிப்பாட்டுடன்தான் அப்போது சு.கவின் தலைவராக அதை வழிநடத்தினார் மைத்திரி. அந்தப் பலத்துடன்தான் அவரது கட்சி *96* எம்.பிக்களைப் பெற்று நாடாளுமன்றுக்குச் சென்றது. ஆனால் அடுத்த நான்கரை ஆண்டுகளில் - மைத்திரி ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்க வேண்டிய சமயத்தில் - அவர் தலைமையில் சு.கவில் எஞ்சி இருந்த எம்.பிக்களின் எண்ணிக்கை *96* இல் இருந்து கரைந்து, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல' ஆக வெறும் *16* என எஞ்சியிருந்தது.

ஆனால் ரணிலின் நிலைமை அப்படியல்ல. அவரது கட்சி கடந்த பொதுத் தேர்தலில் கூண்டோடு அடிபட்டு போக, ஆகக் கிட்டிய ஒரே ஒரு தேசிய பட்டியல் எம்.பி. பதவி மூலம் தனி ஒருவராகப் பின் கதவால் நாடாளுமன்றுக்குள் நுழைந்தவர் ரணில். தனது அரசியல் தந்திரோபாயத்தால், அரசியல் களச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, ஜனாதிபதியானார் அவர். கிடைத்தது ஆக இரண்டு வருடப் பதவிக் காலமே. அதை வைத்துக்கொண்டு தனக்கு ஆதரவான எம்.பிக்கள் பட்டியலைக் கணிசமாக உயர்த்தும் சாதனையை தமது பிரித்தாளும் தந்திரம் மூலம் எட்டி நிற்கின்றார் அவர்.

ஆக சு.கவைக் கரைத்து, பொருமிப் பெருத்த பொதுஜன பெரமுன, இப்போது ரணிலின் ஐ. தே.கட்சி ஆதரவுத் தரப்புக்குள் கணிசமாகக் கரைந்து மோசம் போகப் போகின்றது. அவ்வளவுதான்.

உருவான மாதிரியே பொதுஜன பெரமுன கரைந்து போவது என்பது, விதைத்ததை அறுக்கும் வினைப் பயன் போன்றதுதான்....!

## இரகசியம் பரகசியம்...

(2 பக்கத் தொடர்ச்சி...)

எனக்கு ரணிலின் அவசர அழைப்புக் கிடைத்தது. அவசரமாக சந்திக்க அழைத்து இருந்தார் அவர்.

நானும் விரைந்தேன். அதன் பின்னர்தான் சுவாரஸ்யமான விடயங்கள் கட்டவிழ்ந்தன.

"உங்கள் அலுவலர் இருவரும் என்னுடன் தொடர்பு கொண்டு வன்னியில் தமிழ்ச்செல்வன் குழுவினரைச் சந்திப்பதற்குத் திகதி கேட்டு, நேரம் ஒதுக்கி, அவற்றைப் பெற்ற பின்னர் அப்படி மூன்று தடவைகள் போகாமல் விட்டனர். அது புலிகளைக் கடுஞ்சீற்றத்துக்கு உள்ளாக்கி விட்டது" – என்று விவரங்களை எடுத்துரைத்தேன் நான்.

தமது அலுவலகர்களைக் கடிந்து கொண்டார் ரணில். எப்படியாவது தமது சார்பில் புலிகளின் தலைமையை நேரில் போய்ச் சந்தித்துப் பேசி, தமிழ் மக்களை வாக்களிக்க – தமக்கு ஆதரவாக வாக்களிக்க செய்ய – நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டார்.

"நான் முதலில் போகிறேன். ஆனாலும் உங்கள் பிரதிநிதியாகப் போக முடியாது. பின்னால் உங்கள் உத்தியோகபூர்வ பிரதிநிதி ஒருவரை அனுப்புங்கள்" – என்றேன் நான்.

அதற்கு இசைந்த ரணில், எனது இசைவுடன் அப்பணிக்காக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான சந்திரசேகரனை தேர்ந்தார்.

அந்த நள்ளிரவில் சந்திரசேகரன் ரணில் வீட்டுக்கு விரைந்து அழைத்து வரப்பட்டார்.

பின்னர் நடந்தவற்றை நாளை பார்ப்போமா?

## பழைய பல்லவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பறித்த போதும் சரி, இந்தியா பார்த்துக் கொண்டுதானே இருந்தது எனச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழர் விவகாரத்தில் இந்தியா எதுவரை வரும் என்பதை தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

13 ஆவது திருத்தம் தொடர்பில் வழமையாக இந்தியா சொல்லி வருகின்ற வார்த்தைப் பிரயோகத்தின் அடிப்படையிலான அழுத்ததத்தைத்தான் இந்தியா சென்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப் பிரதமர் இந்த முறை கூறியிருக்கின்றார். அதாவது 13 திருத்தத்தை முழுமையாக அமுல்ப்படுத்துங்கள், தேர்தலை நடத்துங்கள் என்பதுதான். இந்தியா வழமையாகப் பாடுகின்ற பல்லவிதான் இது. புதிய பல்லவிகள் ஒன்றும் அவர்கள் பாடுவதில்லையே.

அதேவேளை ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக 13 ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பிற்குள் நுழைந்திருந்தாலும் கூட இத்தனை பல ஆண்டுகளாக இதுவரையில் முழுமையாக அது அமுலப்படுத்தப்படவில்லையே.

வடக்கும் கிழக்கும் இணைத்துத்தான் தரப்பட்டது. ஆனால் அந்த இணைப்புக் கூட நீதிமன்றத்தின் மூலமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதைக் கூட இந்தியா பார்த்துக் கொண்டுதானே இருந்தது? சமீப காலத்திலே – நான்கு, ஐந்து வருடங்களாக – மாகாண சபைத் தேர்தல் கூட நடைபெறவில்லை. அதையும் இந்தியா பார்த்துக் கொண்டுதானே இருந்தது.

இது மட்டுமல்ல. தேர்தலும் இல்லை, சபையும் இல்லை என்ற காரணத்தைச் சாட்டாக வைத்துக் கொண்டு வர்த்தமானி பிரகடனத்தின் மூலமாக இலங்கை அரசு மாகாண சபைகளுக்குரிய அதிகாரங்களைப் பறித்து எடுத்துக் கொண்டுள்ளது. ஆனால் அது சட்டப்படி தவறு.

அரசமைப்பில் சொல்லப்பட்டதை வர்த்தமானி பிரகடனத்தின் மூலமாக மாற்ற முடியாது. ஆனால் இலங்கை அரசாங்கம் அதையும் செய்தது. இப்படி எல்லாம் இந்தியாவிற்கு முன்னால் நிகழ்ந்தது கொண்டு தான் இருந்தன. ஆகவே புதிதாக சொல்வதற்கு இந்தியாவிற்கு என்ன இருக்கிறது? ஆக இந்தியா எதுவரை வரும், எதுவரை சொல்லும் என்பதை தமிழ அரசியல் தலைவர்கள் அறிந்து புரிந்து கொள்ள வேண்டும். – என்றார்.

# மொழியைக் காக்கின்ற கடப்பாடு எங்களின் ஊடகங்களுக்கு உண்டு

## சுட்டிக் காட்டுகின்றார் கலாநிதி ஆறு.திருமுருகன்

–எஸ்.நிதர்ஷன்–

மொழியைக் காக்கின்ற கடப்பாடு ஊடகங்களுக்கு உண்டு என வலியுறுத்தினார் சிவபூமி அறக்கட்டளை நிறுவுநர் கலாநிதி ஆறு. திருமுருகன்.



சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரனின் வழிகாட்டலில் பிரசுரமாகும் “முரசு” மின்னிதழின் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் கலாச்சார மத்திய நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது நிகழ்வில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தர்மநெறியில் நின்று, உண்மையை உள்ளவாறு சொல்லி, சரியான வழியிலே நின்று, மக்களை ஆற்றுப்படுத்தி ,தீமையை வளரவிடாமல் காக்க வேண்டியது பத்திரிகைகளின் தலையாய கடமையாகும். அந்தக் கடமையை பத்திரிகைகள் சரிவரச் செய்ய வேண்டுமென்றே வேண்டுகிறேன்.

எங்கள் இனத்திற்கு வந்த துன்பம் என்பது எல்லையற்றது. எத்தனையோ வருசங்களாக இலங்கையிலே தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தைச் சார்ந்த எம்மவர்கள் படுகின்ற துயரிற்கு எல்லையேயில்லை. எனவே பத்திரிகைகள் மிகப் பக்குவமாக எங்களது சமூகத்தை காப்பாற்றுவதற்கும் நல்ல செய்திகளை வழங்குவதற்கும் இளைய தலைமுறையை நல்ல முறையிலே ஆற்றுப்படுத்துவதற்கும் தங்களது கடமையைச் செய்ய வேண்டும். குறிப்பாக “முரசு” அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்று இந்த நாளிலே வேண்டுகிறேன்.

எங்களுடைய சமுதாயத்திலே எவ்வளவோ கஷ்டமான சூழல் உருவாகிக் கொண்டிருக்கின்றது. எதுவும் நிரந்தரமில்லாத ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுடைய சனத்தொகை குறைந்து கொண்டே போகின்றது. எங்களுடைய நாட்டிலே கற்றவர்கள் நாள்தோறும் வெளியேறிக் கொண்டே இருக்கின்றார்கள்.

இங்கே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் அவர்களும் இருக்கின்ற நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால் அங்கு தமிழ் மாணவர்களின் தொகை 55 வீதமாகி விட்டது. எதிர்காலம் என்னவாகுமென்று தெரியாது. இந்தப் பல்கலைக்கழகத்துடன் ஒன்றாக இருந்த வவுனியா வளாகத்தையும் பிரித்து வவுனியா தனியாகத் தனிப் பல்கலைக் கழகமாக்கினாலும் அங்கேயும் தமிழ் மாணவர்களின் தொகை கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

எங்களுக்கு எங்களுடைய பிள்ளைகள் படிக்க வேண்டும். எங்களுடைய சமுதாயம் சகல உரிமைகளோடும் வாழ வேண்டும். எனவே பத்திரிகைகள் நிறைந்த கடமையைச் செய்ய வேண்டிய ஒரு கால கட்டம் வந்திருக்கிறது. பத்திரிகை தர்மம் என்கின்ற உயர்ந்த தர்மத்தைத் தவறாது பேண வேண்டும். தூய தமிழை – அழகான தமிழை – பேணுவதிலே இன்னமும் இங்குள்ள பத்திரிகைகள், ஊடகங்கள் தமது கடமையைச் செய்கின்றன. முரசும் அந்த முறையைப் பின்பற்றும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

ஏனென்றால் மொழியைக் காக்கின்ற கடப்பாடு ஊடகங்களுக்கு உரியது. ஊடகங்கள் நாகரிகம் என்று சொல்லி, தாங்கள் புதிய பாணியிலே பேசுகிறோம் அல்லது எழுதுகிறோம் என்று கூறி, இத்தனை வருசமாக கட்டிக்காத்த பண்பாட்டை தொலைத்து விடுவார்களானால் அதுவும் இனத்திற்கும் மொழிக்கும் செய்கின்ற துரோகமாகிவிடும். எனவே நல்ல சொற்களைப் பயன்படுத்துங்கள். நல்லதைச் செய்யுங்கள்.

வடக்குக் கிழக்குத் தமிழர்கள் மட்டு மல்ல, 200 வருடங்களாகத் துன்பப்படுகின்ற மலையக மக்களுக்காக இந்த நாள்களிலே இலங்கை வாழ் தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் குரல் கொடுக்க வேண்டும்.

எங்களுக்கு எங்கள் நிலத்தை ஒப்படையுங்கள் என்று நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் நாங்கள் வீடில்லாமல் வாழுகிறோம் என்றும், இருக்க இடமில்லாமல் வாழுகிறோம் என்றும் 200 வருடங்கள் தமிழ்ச்சாதியொன்று எங்கள் மண்ணிலே அழுது கொண்டிருக்கின்றார்கள். எனவே கண்ணீரைத் துடைக்கின்ற போது அதற்குள்ளேயும் நாங்கள் தர்மத்தின் அடிப்படையிலே எல்லா இனத்திற்காகவும் துன்னப்படுபவர்களுக்காகவும் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும்.

அன்றைக்கு மலையகத் தமிழர்கள் சிறிமா –,சாஸ்திரி ஒப்பந்தத்திலே போகாமல் இருந்திருந்தால் இன்றைக்கு நாங்கள் தலைநிமிர்ந்து நின்றிருக்கலாம். எங்களுக்கு வந்த கஷ்டங்களில் இது மிகவும் முக்கியமானது. அதுவும் குறிப்பாக இன்றைக்கு நாங்கள் அவலப்படுகிறோம். அந்தப் பத்து லட்சம் மக்களும் போகாமல் – இந்தியாவுக்கு அனுப்பப்படாமல் இருந்திருந்தால் பத்துக் கோடியாகியிருப்பார்கள். பத்துக் கோடி தமிழர்கள் இந்த மண்ணிலே இருந்திருந்தால் உலகமே ஒரு கணம் எங்களைத் திரும்பிப் பார்த்திருக்கும்.

எனவே பத்திரிகைகள் செய்ய வேண்டிய மகத்தான கடமை எல்லாருக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். நல்ல விடயங்களை எழுதுங்கள். எங்களுடைய சமுதாயத்திற்கு ஏற்ற சிந்தனைகளைப் பரப்புங்கள். எங்களுடைய பொருளாதாரத்தைக் கட்டி வளர்ப்பதற்கு என்ன வழியென்று பாருங்கள். தனியே கோபங்களை வளர்ப்பதற்கு ஊடகங்கள் முந்தியடியாதீர்கள்.

கோபங்கள் வளர்வதனால் – சாபங்கள் வளர்வதனால் – எதைச் சாதிக்கப் போகின்றோம்? தர்மத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நீதியைக் கேட்பதற்கு எப்படி எல்லாரையும் ஒற்றுமைப்படுத்தலாம் என்று கருதித்தான் பத்திரிகைகள் தங்களுடைய கடமையைச் செய்ய வேண்டும். முரசு அந்தக் கடமையை செய்யும் என நம்புவோம்.

வித்தியாதரனை 50 ஆண்டுகளாக நான் அறிவேன். நாங்கள் ஒன்றாக ஒரே கல்லூரியில் படித்தவர்கள். என்னுடைய தாய், தந்தையரிடத்திலே கற்றவர் வித்தியாதரன். என்னுடைய வாழ்க்கையிலே 50 வருடங்களாக எங்களுக்குப் பழக்கம் இருக்கிறது. வித்தியாதரன் படிக்கின்ற காலத்திலே அவர் கோல் கீப்பராக விளையாட்டில் விளங்கியிருந்தார்.

அவர் தான் சார்ந்தவர்களை – தனது அணியினரை – காப்பாற்றுவதற்காக கோல் கீப்பராக இருந்து வெற்றிகளைத் தருவார். ஆனால் அவர் கப்டனாக முடியவில்லை. நீண்டகாலமாக அவர் கோல் கீப்பராகவே தான் இருக்கின்றார். அவர் யாரைச் சாருகிறார்களோ அவர்களைக் காப்பாற்றுவார். ஆனால் கோல் கீப்பரை கப்டனாக்குகின்ற முறை இன்னமும் எங்கள் சமூகத்தில் வரவில்லை. அவரையும் அவரது பத்திரிகை உலகத்தையும் வாழ்த்துகிறேன். – என்றார்.

# ஹரின், மனுஷ இருவரின் மீதான தடையை விலக்கியது ஐ.தே.க.!

## செயற்குழுவிலும் இருவரும் சேர்ப்பு



அமைச்சர்களான ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எதிராக விதித்திருந்த தடையை ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நீக்கியுள்ளது. அத்துடன், இருவரும் கட்சிச் செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் செயற்குழ கூட்டம் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று நடைபெற்றது.

இதன்போதே ஐ.தே.கவை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இருவருக்கும் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டமையுடன், இருவரும் கட்சிச் செயற்குழுவுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஹரின் பெர்ணான்டோவும், மனுஷ நாணயக்காரவும் ஏனையோருடன் சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமித்தமையை அடுத்து , அவர்களின் கட்சி உறுப்புரிமை ஐக்கிய தேசியக் கட்சியால் நீக்கப்பட்டது.

இந்நிலையில் இருவரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டமையை அடுத்து, அந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டமையால் இவ்விருவரையும் கட்சியில் இருந்து நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

# அவசர மருத்துவத் தேவைகளுக்காக மூவாயிரம் கோடி ரூபா மேலதிக நிதி

கொழும்பு,ஓக.03

மக்களின் நல்வாழ்வை பாதுகாக்கும் வகையில் புதிய மருத்துவ சட்டமூலத்தை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். அதன்படி, தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்து, சிறந்த சுகாதார சேவையையும், பொது நலனையும் உறுதி செய்ய முடியும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கேற்ற மாற்றங்களை ஆராய்ந்து புதிய மருத்துவச் சட்டமொன்றைக் கொண்டு வருவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர், சட்ட வரைஞர் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் தலைவர் ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு செயற்படும்.



சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற பின்னாய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் போதுமான அவசர மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மூவாயிரம் கோடி ரூபா மேலதிக நிதியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நாடுகளின் மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை அங்கீகரிக்கும் செயல்முறையை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு அறிவுறுத்தினார். அந்த நோக்கத்திற்காக, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, அத்தியாவசிய மருந்துகள் ஒழுங்காகவும் விரைவாகவும் கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது அறிவிக்கப்பட்டது.

தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையில் காணப்படும் பணியாளர் பற்றாக்குறை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. மருத்துவ தயாரிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும் பொது சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் பங்களிப்பை வலுப்படுத்த விரிவான அறிக்கை ஒன்றை கையளிக்குமாறும் ஜனாதிபதி இதன் போது அறிவித்தார்.

மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டதுடன், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், மருந்து வகைகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பது தொடர்பில் உடனடித் தகவல் வழங்கும் வகையில் இணையவழி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான எளிய மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையை தயாரிப்பதற்காக திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

மேலும், தாதியர் ஆள்சேர்ப்புக்கான தகைமைகள் தற்போதைய சுகாதார சேவைத் தேவைகளுடன் இணைந்து செல்லும் வகையில் சேவை யாப்பில் திருத்தம் செய்யுமாறு சுகாதார அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கலைத் துறையில் கற்ற தகுதியானவர்களை தாதியர் பணிக்கு இணைத்துப் பயிற்சியளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்தார்.



மேலும், மருத்துவப் பொருள்களின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மதிப்பிடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரநிலை 4 தரநிலைகளுடன் கூடிய ஆய்வக வசதிகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபை என்பவற்றுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இரண்டு வருடங்களுக்குள் காலாவதியாகும் அல்லது அகற்றப்படும் பயன்படுத்த முடியாத வைத்தியசாலை உபகரணங்களின் பட்டியலை உடனடியாக சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சுகாதார அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

அனைத்து குடிமக்களுக்கும் வலுவான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புகளை விரைவாக செயல்படுத்துவதற்கு இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து தரப்பினரும் தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தினர்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜனக்க சிறீ சந்திரகுப்த, சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன உட்பட சுகாதார அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# மலையகத்தின் மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணி நிச்சயம்

## அமைச்சர் ரமேஷ் பத்திரன மீண்டும் உறுதி



“மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், அவர்களுக்கான காணி உரிமை எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொடுக்கப்படும். என்று பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் தொழிற்சாலைகள் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன மீண்டும் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

“தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் 10 பேர்ச்சஸ் காணியை அவர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய எதிர்வரும் காலங்களில் அவர்களுக்கான காணி உரிமை பெற்றுக்கொடுக்கப்படும். அதன் பின்னர் அவர்களுக்கு வீட்டுக் கடன்களை பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.”– எனவும் அமைச்சர் கூறினார்.

# ‘13’ ஐ நடைமுறைப்படுத்த சு.க. நாடாளுமன்றில் ஒத்துழைக்கும்

## பிரதித்தலைவர் அங்கஜன் எம்.பி. உறுதி



**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் முன்னெடுக்கப்படுகின்ற - அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான - நடவடிக்கையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஒத்துழைப்பை நாடாளுமன்றத்தில் வழங்கும் என சிறிலங்கா சுதந்திர கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பான விவாதம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நடத்த உள்ளமை தொடர்பில் அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சியைப் பொறுத்த வரை அன்றிலிருந்து இன்று வரை சாதகமான நிலைப்பாட்டையே அது கொண்டிருக்கிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெற்ற சர்வகட்சி மாநாட்டில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவும் நானும் கலந்து கொண்டோம்.

எமது கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் பதின்மூன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எமது கட்சியின் கருத்துக்களை வெளிப்படைத் தன்மையுடன் முன்வைத்தமையுடன் கட்சியின் விருப்பத்தையும் தெரிவித்துள்ளார்.

எனினும், 13 ஆவது திருத்தத்தில் என்னென்ன விடயங்களைப் பற்றி பேசப் போகிறோம் அல்லது நடைமுறைப்படுத்தவுள்ளோம் எனத் தெளிவான விளக்கத்தை சமர்ப்பியுங்கள் என ஜனாதிபதியிடம் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

30 வருட யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு இதுவரை முன்வைக்கப்படவில்லை. தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தம் முழுமையான தீர்வை முன்வைக்காத நிலையில் தனை ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

ஏனெனில் இலங்கை – இந்தியா ஒப்பந்தத்தின் பயனாக அரசப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் சில யோசனைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளார் எனத் தெரியவரும் நிலையில் எமது கட்சியின் தலைவர் முன்னர் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் எமது செயற்பாடுகள் நாடாளுமன்றத்தில் அமையும். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

### தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மீளவும் ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் கனவு காணுகிறார் எனவும், ஜனாதிபதித் தேர்தல்தான் அனைத்திற்கும் சர்வரோக நிவாரணி என்றவாறு ரணில் கருதுகிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதியொன்றில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இந்திய தூதுவருக்கும் இடையில் வெள்ளிக்கிழமை சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. அதன் போது பல விடயங்களை நாங்கள் ஆராய இருக்கிறோம். அதில் வடக்கு – கிழக்கில் மட்டுமாவது முதற்கட்டமாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க இருக்கிறேன்.

அதே நேரத்தில் ரணில் விக்கிரமசிங்கவிற்குத் தேர்தல் என்றால் அலர்ஜி. தேர்தல் என்றாலே இப்போது அவருக்கு அப்படி அலர்ஜியாகத்தான் இருக்கிறன்து. யார்,யாருக்கோ எது, எதுக்கோ எல்லாம் அல்ர்ஜி இருக்கின்றது. ஆனால் ஜனாதிபதி ரணிலுக்கு தேர்தல் என்றாலே அலர்ஜியாக உள்ளது.

உள்ளுராட்சித் தேர்தலை இல்லாமல் ஆக்கிவிட்டார். மாகாண சபைத் தேர்தலும் இல்லை. இப்போது போகின்ற போக்கைப் பார்த்தால் நாடாளுமன்றத் தேர்தலைக் கூட இல்லாமலாக்கி விடுவாரோ தெரியவில்லை. ஏனென்றால் அவரது ஜனாதிபதித் தேர்தல் வரும் வரைக்கும் அவர் இப்படிதான் செய்வார்.

அதாவது அவர் மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு கனவு காண்கிறார். அதில் வெற்றிபெறுவார் என்று அவரே நினைக்கிறார். அது வரைக்கும் வேறு எந்தத் தேர்தலும் வேண்டாமெனக் கருதுகிறார். அப்படி வேறு தேர்தல்களை வைத்து மக்களின் நிலைப்பாட்டை அறிந்து கொண்டால் அது தமக்கு ஆபத்தாக அமையுமென்று அவர் கருதுகிறார்.

ஆகவே அவருக்கு ஒரு சிறிய வழியை கொடுக்கிறோம். அதாவது வடக்கு – கிழக்கில் தேர்தல் நடத்துவதால் அவருக்கு பெரிய நஷ்டம் வந்துவிடப் போவதில்லை. ஆகவே அதை அவர் செய்யலாம். அதைவிடுத்து தென்னிலங்கையில் தேர்தல் நடத்தினால் – அங்கே அவருக்கு எதிராக மக்கள் அணிதிரண்டு விட்டார்கள் என்றால் – அவரது கனவு புஸ்வமாணமாகிவிடும் என்று கருதலாம்.

ஜனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கும் அதில் தான் வெற்றி பெற வேண்டும் என்ற கனவும் எல்லாரையும் விட ரணில் விக்கிரமசிங்கவிற்குத்தான் அதிகமாக உள்ளது. அதை அவர் அடைவதற்கு முன்னதாகவே பல விடயங்கள் நாட்டிலே இருக்கின்றன. தேசிய இனப்பிரச்சினை, விலைவாசி, வாழ்வாதாரப் பிரச்சனை எல்லாம் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அவர் தீர்க்க வேண்டும்.

ஆனாலும் இப்பொழுது எல்லாத் தேர்தலையும் ஒத்தி வைத்துவிட்டு சர்வரோக நிவாரணி போல, எல்லா நோய்களுக்கும், எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதித் தேர்தல்தான் ஒரே ஏக போக சர்வரோக நிவாரணி என்றதாகக் காட்டுவதற்கு ரணில் விரும்புகிறார். ஆனால் நாங்கள் பல சர்வரோக நிவாரணிகளை எல்லாம் பார்த்துக் களைத்துப் போனவர்கள். எங்களுக்கு எல்லாம் தெரியும். கடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் நாம் பார்த்திருக்கிறோம். – என்றார்.

### 13 குதித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில் பொலிஸ் அதிகாரம் தவிர 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களைப் பகிர்வது சம்பந்தமாகவும், அதற்குத் தேவையான சட்ட திருத்தங்கள் பற்றியும் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் கட்சிகளிடமும் ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே 13 ஆவது திருத்தச் சட்ட விவகாரத்தில் அடுத்தகட்ட நகர்வுகள் சம்பந்தமான அரசின் நிலைப்பாட்டை அடுத்த வாரம் நாடாளுமன்றில் ஜனாதிபதி தெளிவு படுத்தவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

### ‘13’ தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றம் தீர்மானம் எடுக்கும் வகையில் ஜனாதிபதி அதிகாரத்தை வழங்கியிருந்தார். அதற்கேற்ப கட்சித் தலைவர்கள் அவர்களது யோசனையைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் ஜனாதிபதியால் வழங்கப் பட்டிருந்தது.

இந்தநிலையில், எதிர்வரும் 15 ஆம் திகதி சர்வகட்சி மாநாடு மீண்டும் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனையைப் பெற முன் மொட்டுவின் ஆதரவைப் பெற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

13 ஆவது திருத்தம் தொடர்பில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் இணக்கம் இல்லை என்றும், ஜனாதிபதி மொட்டுவின் உறுதியான நிலைப்பாட்டை அறிவித்த பின் ஐக்கிய மக்கள் சக்தி தனது நிலைப்பாட்டை அறிவிக்கும் என்றும் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.

# விவசாயத்துக்கு உதவி மக்களை வாழவிடுங்கள்!

## கோரிக்கை விடுக்கிறார் சுரேஷ் க.பிரேமச்சந்திரன்



சப்ரகமுவ மாகாண விவசாயிகளுக்கு நீரையும் வடக்கு மாகாண விவசாயிகளுக்கு உரிய விலையையும் வழங்கி விவசாயத்தையும் மக்களையும் வாழ விடுங்கள்.

உடவல நீர்த்தேக்கத்தின் நீரைத் திறந்து விடுவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினையால் தென்பகுதி விவசாயிகளுக்கு உற்பத்திக்கு உரிய விலை கிடைக்கவில்லை. இதனால் வடபகுதி விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர்.

நாட்டின் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து, உணவுப்பொருள் உற்பத்தித் தொழிற்சாலையான விவசாயத்தை வாழவிடுங்கள்.

சப்ரகமுவ மாகாணத்திற்கான சிறுபோக விவசாயத்துக்கு உரிய நீரை காலக்கிரமத்தில் வழங்குவதாக உத்தரவாதமளித்த மகாவலி அதிகாரசபை சிறுபோகத்தின் இறுதிக் கட்டம் நெறுங்கியுள்ள நிலையில் நீரை வழங்க முடியாத நிலையில் உள்ளது.

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மகாவலி அதிகாரசபையின் இத்தகைய கையாலாகாத் தனத்தை எச்சரித்தும் வடக்கில் காணி அபகரிப்பின் கருவியாக மகாவலி அதிகாரசபை செயற்படுவதை அம்பலப்படுத்தியும் அவர் விடுத்துள்ள அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

சப்ரகமுவ மாகாணத்தில் சமநல வாவியின்கீழ் ஆயிரக்கணக்கான ஹெக்டெயர் நெல் வயல்கள் சிறுபோகத்தில் செய்கை செய்யப்படுகிறது. இந்த நெற்பயிருக்கான தண்ணீர் கிடைக்காத பட்சத்தில் பல ஆயிரக்கணக்கான ஹெக்டெயரில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர்கள் அழிந்து நாசமாகிவிடும் என்பதுடன் இந்தியாவிடமிருந்தோ, சீனாவிடமிருந்தோ, வியட்நாமிடமிருந்தோ இலங்கை, அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

தமது விவசாயம் அழிவின் விளிம்பில் இருப்பதாகவும் தமக்குத் தேவையான நீரை உடன் விடுவிக்கும்படியும் கோரி அப்பிரதேச மக்கள் கடந்த பத்து நாள்களாகச் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இன்னமும் அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. உடவலவ அணையிலிருந்து நீர் திறந்துவிடப்படுமாயின், ஹம்பாந்தோட்டை, காலி உட்பட ஐந்து மாவட்டங்களுக்கான மின்சார விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும் என்று எரிசக்தி வலுசக்தி அமைச்சர் கூறியுள்ளார். ஆகவே நீரைத் திறந்துவிட முடியாது என மின்சார அமைச்சர் கூறுகின்ற அதே சமயம், விவசாயத்திற்கு நீர் கிடைக்காவிட்டால் 1700கோடி ரூபா நட்டம் ஏற்படும் என்று விவசாய அமைச்சர் கூறுகிறார்.

தென்மாவட்டங்களுக்கான மின்சார விநியோகம் பாதிக்கப்பட்டால் நூறுகோடி ரூபா நட்டம் ஏற்படும் என்று மின்சார அமைச்சர் கூறுகின்றார். ஏற்கனவே பொருளாதார ரீதியில் அதளபாதாளத்தில் இருக்கக் கூடிய ஒரு நாட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய நீரை கொடுக்கமாட்டோம் என்று அடம் பிடிக்கும் அமைச்சரும் நீருக்காகப் போராடும் மக்களைத் திரும்பிப் பார்க்காத ஜனாதிபதியும் இந்த நாட்டை பொருளாதார பாதாளத்தில் இருந்து மீட்கப் போகிறோம் என்று சொல்வது நகைப்புக்குரியது.

தமது மாவட்டங்களைச் சார்ந்த சிங்கள விவசாயிகளுக்கே நீரைத் திறந்து விடாத அமைச்சர்கள், வடக்கு மாகாணத்துக்கு மகாவலியைக் கொண்டுவரப்போகிறோம் என்றுகூறி, 'எல்' வலயம், 'ஜெ' வலயம், 'ஐ' வலயம் என்ற பெயரில் தமிழ் மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

முறையான நீர்ச்சேகரிப்பு வசதிகளின்றி, மழைநீரை சேமித்து வைத்துள்ள குளங்களை நம்பி, மேற்கொள்ளப்பட்டுவரும் வடக்கு மாகாண விவசாயச் செய்கையில் விதை நெல்லு, உரம், கிருமி நாசினிகள், டீசல், உழவு கூலி என அனைத்துமே விலையேறியிருக்கக் கூடிய சூழ் நிலையில், வடக்கு மாகாண விவசாயிகள் தமது நெல்லுக்கு ஒரு நீதியான விலைகேட்டுத் தொடர்ந்தும் குரல்கொடுத்து வருகிறார்கள். ஆனால் அவர்களது கோரிக்கைகள் கண்டு கொள்ளப்படாமல், தனியார் வியாபாரிகள் கொள்ளை இலாபம் அடையும் நோக்குடன் நெற்சந்தைப் படுத்தும் சபையினரும் அராவிலைக்கு நெல்லை கொள்முதல் செய்ய முயற்சிக்கின்றார்கள். பல ஆயிரம், லட்சங்களைச் செலவு செய்த விவசாயிகள் இரத்தக் கண்ணீர் வடித்து நிற்கிறார்கள். ஆகவே அரசு முதலில் இந்த நிலைமையை மாற்ற வேண்டும். வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ மேற்கிலோ விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்ற கொள்கை முடிவை அரசு எடுக்க வேண்டும். இனவாத கண்ணோட்டங்களை விடுத்து, விவசாயிகளை விவசாயிகளாகவே நடத்துங்கள். இந்த நாடடுக்கு உணவளிப்பவர்களை வாழவிடுங்கள்.

ஏற்கனவே, ஹம்பாந்தோட்டையிலிருந்தும் ஏனைய சிங்கள பிரதேசங்களில் இருந்தும் கொண்டுவந்து குடியேற்றப்பட்டவர்களுக்கு எந்தவித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்காமல் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். இந்த இலட்சணத்தில் நாடு முழுவதும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவ வேண்டும் என்ற ஒரே நோக்கில், அப்பாவி சிங்கள மக்களை அழைத்து வந்து வடக்கில் குடியேற்றுவதற்கு இலங்கையின் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ஒருபுறமும் தொல்பொருள் திணைக்களம் இன்னொரு புறமும் இந்த காணிகளைக் கபளீகரம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றுவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

அரசு, முதலாவதாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தென்பகுதி சிங்கள மக்களுக்கு தாமதமின்றி தண்ணீரைத் திறந்துவிடுவது மாத்திரமல்லாமல், குடியேற்றம் என்ற பெயரில் அப்பாவி சிங்கள மக்களை அழைத்துவந்து அவர்களை நடுத்தெருவுக்குக் கொண்டுவருவதையும் நிறுத்த வேண்டும்.

மகாவலி ஆறு ஓடும் தென்பகுதி சிங்கள மக்களுக்கே தண்ணீர்ப் பற்றாக்குறையும் அவர்களுக்கான செய்கைக்கான நீரும் வழங்க முடியாத நிலை இருந்தால், மகாவலி ஆறு எட்டியும் பார்க்காத வடக்கு மாகாணத்திற்கு மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் காணிகளைச் சுவீகரிப்பதென்பது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற அரசின் உண்மையான நிகழ்ச்சி நிரலே அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்?

மணலாறு என்ற தமிழ்ப் பிரதேசம் வெலிஓயா என்ற பெயரில் சிங்கள மயமாக்கப்பட்டு மகாவலி 'எல்' வலயம் என்று உருவாக்கி முப்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஆனால் அந்த வலயத்திற்கு மகாவலி ஆற்றின் நீர் இன்னமும் எட்டியும் பார்க்கவில்லை. இப்பொழுது மகாவலி 'ஐ' வலயம், 'ஜெ' வலயம் என்ற பெயர்களில் புதிய வலயங்களை உருவாக்குவதில் மகாவலி அதிகாரசபை ஈடுபட்டு வருகின்றது. வன்னிப் பகுதியில் சிறிய குளங்களை நம்பி, குறைந்தளவான விவசாயிகள் தமது விவசாயத்தைச் செய்து வருகின்றனர். நீங்கள் மகாவலி நீரைக் கொண்டுசெல்கிறோம் என்ற பிழையான பெயரில் இப்பொழுது விவசாயம் செய்யும் மக்களையும் விரட்டி, சிங்கள மக்களையும் குடியேற்றி மொத்தத்தில் தற்பொழுதுள்ள விவசாயத்தையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றீர்கள். தயவு செய்து இத்தகைய தொலைநோக்கற்ற சகல நடவடிக்கைகளையும் நிறுத்துங்கள்.

மின்சாரம் இல்லாவிட்டால் மனிதனால் உயிர்வாழ முடியும். ஆனால் வயிற்றுக்கு உணவில்லையேல் மக்கள் செத்து மடிவதைத்தவிர வேறுவழியில்லை. உணவில்லாமல் மருந்தில்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் எம்கண்முன்னே செத்து மடிந்ததைப் பார்த்த அனுபவம் எங்களுக்கு இருக்கிறது. அந்தத் துன்பம் சிங்கள மக்களுக்கு ஏற்படவேண்டாம்.

அடுத்த ஜனாதிபதியும் நான்தான் என்று கூக்குரல் இடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களே இந்த விடயங்களை தயவு செய்து தங்களது கவனத்தில் எடுத்துக்கொள்ளுங்கள்.- என்றுள்ளது.



# நாவாந்துறை சென் மேரிஸை வீழ்த்தி இறுதிக்கு நுழைந்தது யங் ஹென்றிஸ்

## ஞாயிறன்று பாடும் மீனுடன் பலப் பரீட்சை

***A one media***வின் ஒருங்கிணைப்பில் வடமாகாண விளையாட்டுத் திணைக்களம், சக்தி டிவியுடன் இணைந்து நடத்தும் யாழ்ப்பாணம் உதைப்பந்தாட்ட பிரீமியர் லீக் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதி போட்டி நேற்றைய நாள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

இந்த இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் விளையாடிய இளவாலை யங் ஹென்றிஸ் அணி , நாவாந்துறை சென் மேரிஸ் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

ஆட்டத்தில் முதல் பாதியில் முதல் கோலை நாவாந்துறை சென் மேரிஸ் அணி பெற்றுக்கொண்ட போதிலும், அதனைத் தொடர்ந்து சிறப்பாக விளையாடிய இளவாலை யங் ஹென்றிஸ் அணி 3 கோல்களை போட்டு வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

இவ்வெற்றியின் மூலமாக எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற இருக்கும் இறுதி போட்டியில் குருநகர் பாடும் மீன் அணியை இளவாலை யங் ஹென்றிஸ் எதிர்கொள்ளகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.






# தேர்தல் ஒன்றை நடத்தி வயோதிபர்கள் தர்பாரை வீட்டுக்கு அனுப்புங்கள்!

## மிஹிந்தலையின் விகாராதிபதி சஜித்திடம் நேரில் தெரிவிப்பு



"சுதந்திரத்துக்கு பின்னர் ஆட்சியிலிருந்த அனைத்து தரப்பினருமே இன்றைய இந்த நிலைக்கு நாட்டை கொண்டு வந்துள்ளனர். இன்று தலைதூக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு யார் பொறுப்பு கூறுவது? இந்த ஆட்சியாளர்களை நாம் நிராகரிக்கின்றோம். எனவே தேர்தல் ஒன்றை நடத்தி, திறமையானவர்களை கொண்டு வந்து, வயோதிபர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியுமான தரப்பினரிடம் பொறுப்புகளை வழங்க வேண்டும்."

- மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவா ஹெங்குனுவெவே தம்மரதன தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்திற்கு சென்று விசேட மத வழிபாடுகளில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அச்சமயம் மிஹிந்தலை மகா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹெங்குனுவெவே தம்மரதனதேரரை சந்தித்து கலந்துரையாடினார். அப்போதே தேரர் மேற்கண்டவாறு சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்தார்.

தேரர் அங்கு மேலும் கூறுகையில் -

சுதந்திரத்தின் பின்னர் நீங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருமே இந்த நிலைக்கு நாட்டை கொண்டு வந்துள்ளீர்கள்.

இன்று தலைதூக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டுக்கு யார் பொறுப்பு கூறுவது என்பது தொடர்பில் கூறுங்கள் பார்ப்போம். நாடாளுமன்றத்தில் சட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது ங்கிருப்பேபார் ஆளுங்கட்சியுமல்ல. எதிர்க்கட்சியுமல்ல. அவர்கள் மக்கள் பிரதிநிதிகள். மக்களே தமது பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பியுள்ளனர். எனவே நாட்டு மக்களைப் பாதுகாப்பது உங்கள் அனைவரினதும் பொறுப்பாகும்.

பிள்ளைகள் உயிரிழக்கின்றனர். சத்திரசிகிச்சை மூலம் உயிரிழக்கின்றனர். மருந்துகள் இல்லை. அதிகளவிலான வைத்தியர்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். இளைஞர், யுவதிகள் சென்றுள்ளனர். தற்கொலை செய்யும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கு எல்லாம் யார் பொறுப்பு கூறுவது என்று கூறுங்கள்.

முடியுமான அளவு திருடுகிறார்கள். இயன்றளவு தரகுப் பணம் பெற்றுக் கொள்கிறார்கள். மருந்து, முட்டை, நெல் உள்ளிட்ட அனைத்திலும் திருடுகிறார்கள்.

உங்களிடத்தில் இருக்கிறதா என்பது தொடர்பில் எனக்கு தெரியாது. அவர்களுக்கு மதுபான சாலைகள் இருக்கின்றன. இந்த அரசியல்வாதிகள் இணைந்து அழிவை மேற்கொள்கின்றனர். தற்போது மக்களைப் பழிவாங்குகிறார்கள்.

மேலும், ஜனநாயக ரீதியாக மக்களுக்குக் கருத்துத் தெரிவிக்க முடியாது. ஆர்ப்பாட்டம் செய்ய முடியாது. தடிகளால் தாக்குகின்றனர். சிறையில் அடைக்கிறார்கள்.

69 லட்சம் மக்கள் வாக்களித்தார்கள் எனக் கூறுகிறார்கள். தற்போது 69 லட்சம் ஆதரவு இருக்கிறதா எனத் தெரியாது.

மறுசீரமைப்பு என கைத்தட்டிக் கொண்டு நடனங்களை நடத்துவது அல்ல முறைமை.

ஆட்சியாளர்களை நாம் நிராகரிக்கின்றோம். எனவே ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தி திறமையானவர்களை கொண்டு வந்து, வயோதிபர்களை வீட்டுக்கு அனுப்பி விட்டு, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியமான தரப்பினரிடம் பொறுப்புகளை வழங்க வேண்டும்.

ஊழல், மோசடி அற்ற - கல்வி கற்ற - 60 வயதுக்கு குறைந்த - தரப்பினரைக் கொண்டு வாருங்கள். நீங்களும் 60 வயதுக்குக் குறைந்தவர் அல்லவா? இதனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டை கட்டியெழுப்ப முடியாது.- என்றார்

# 5,450 பட்டதாரிகளுக்கு உடன் ஆசிரியர் நியமனம்



பட்டதாரிகள் 5 ஆயிரத்து 450 பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளும் நிறைவடைந்துள்ளன. இதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப் பெற்றுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்ட கல்வி மேம்பாட்டுத் திட்ட வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

விஞ்ஞானம், தொழிநுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் உள்ளிட்ட பாடங்களுக்காக 9 மாகாணங்களிலிருந்தும் பட்டதாரிகள் ஆசிரியர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். அத்தோடு தேசிய பாடசாலைகளுக்காகவும் ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சகல கல்வியியற் கல்லூரிகளையும் இணைத்து பல்கலைக் கழகங்களாக்குவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும். அதற்கான நடவடிக்கைகளும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

# யாழ். - மன்னார் - முல்லைத்தீவை உள்ளடக்கி தெங்கு முக்கோணம்

## அரசாங்கம் நேற்று அறிவிப்பு



கொழும்பு,ஓக.03

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய வரும் செப்டெம்பர் 02 ஆம் திகதி உலக தெங்கு தினத்தை முன்னிட்டு நாட்டின் இரண்டாவது தெங்கு முக்கோணம் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களை மையப்படுத்தி வடக்கில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் தொழிற்சாலைகள் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.**

இதன் மூலம் இப்பகுதிகளில் தெங்கு உற்பத்தி ஊக்குவிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் ரமேஸ் பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குருநாகல், புத்தளம் மற்றும் கொழும்பு மாவட்டங்களை உள்ளடக்கிய முதலாவது தென்னை முக்கோணமானது வருடாந்தம் 300 கோடி தேங்காய்களை உற்பத்தி செய்கிறது. இதில் உள்ளூர் பாவனை போக 20 கோடி தேங்காய்கள் அல்லது அவை மூலமான உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இவ்வருடத்தில் 290 கோடி கிலோகிராம் தேயிலையை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரமே பத்திரன தெரிவித்தார்.

இந்த ஆண்டு இறப்பர் சார்ந்த ஏற்றுமதி மூலம் 90 கோடி டொலர்களும், தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 70 கோடி டொலர்களும் வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், இலங்கையில் கறுவா பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கும் கோப்பிப் பயிர்ச்செய்கையை மீள விரிவுபடுத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

# மொட்டு உறுப்பினர்களை தனிப்படத் ரணில் தாஜா செய்வது பயன் தராது!

## அக்கட்சியின் எம்.பியான எம்.எஸ்.சந்திரசேன கூறுகிறார்



கொழும்பு,ஓக.03

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் எமது ஒத்துழைப்பு தேவையாயின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுடன் உத்தியோகப்பூர்வ பேச்சுகளில் ஈடுபட வேண்டும். அதனை விடுத்து கட்சியின் உறுப்பினர்களிடம் தனிப்பட்ட முறையில் பேச்சுகளில் ஈடுபடுவது பயனற்றது என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

புத்தரமுல்ல பகுதியில் உள்ள சிறிலங்கா பொதுஜன பெரமுன காரியலயத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஸவின் பதவி காலத்தின் மிகுதிக் காலத்தை நிறைவு செய்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் வரை அவர் பதவி வகிக்க முடியும்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேவை என்றால் அவர் கட்சியுடன் உத்தியோகபூர்வமாக பேச்சுகளில் ஈடுபட வேண்டும். அதை விடுத்து கட்சியின் உறுப்பினர்களிடம் தனிப்பட்ட முறையில் பேச்சுகளில் ஈடுபட்டு அவர்களை மகிழ்விக்க முயற்சிப்பது பயனற்றது.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் என்று ஆளும் தரப்பின் ஒருசில உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின்தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல .

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் சிறந்த முறையில் போட்டியிடுவோம். கட்சியைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டதும் எமது வேட்பாளரை மக்களுக்கு அறிவிப்போம். - என்றார்.

# மன்னார் கடலோரத்தில் கரை ஒதுங்கிய சடலம்!

மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிக்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் நேற்று மாலை ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது. சடலம் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவு மில்லை, மீட்கப்படவுமில்லை.

கரை ஒதுங்கிய சடலம் நீல நிற சாரம், அரைக் காற்சட்டை மற்றும் கருப்பு நிற ரி ஸேர்ட் அணியப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் அப்பகுதியில் சடலத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**வவுனியா...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

அனுகூலம் ஏற்படுத்தும் சந்தர்ப்பமாக அது அமையும்.

அதனால் 11ஆம் திகதி நீங்கள் விரும்பினால் யோசித்து உங்கள் கருத்தைத் தெரிவிக்கலாம்" – என்று வவுனியா நீதிவான் அஹமட் ரசீம் தெரிவித்தார்.

இந்நிலையில் தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பன நீதிமன்றத்தில் நேற்று ஒப்படைக்கப்பட்டன.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஹிந்த குணரத்ன, பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.அம்பாவில ஆகியோரின் அறிவுறுத்தல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவினர், வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் உள்ளிட்ட பல பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைது செய்திருந்தன.

கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களையும் நேற்றுப் பகல் வவுனியா சட்ட வைத்திய அதிகாரியிடம் முற்படுத்திய பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை விசாரணைப் பிரிவினர் நேற்று மாலை ஆஜர்படுத்தினர். இதன்போதே சந்தேகநபர்களை 11 ஆம் திகதி வரை அனுராதபுரம் சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

அத்துடன் சந்தேகநபர்கள் சிறு நோய்களுக்கு உட்பட்ட வர்கள் என்பதால் சிறைச்சாலை வைத்திய அதிகாரியிடம் சிகிச்சை பெற்றுக்கொடுக்கும்படி நீதிவான் பணித்தார்.

**இலங்கையர்கள்..**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடைத்தரகர்கள் இலங்கைப் பிரஜைகளை விடுதி யொன்றில் தங்கவைத்துள்ளனர். அவர்கள் திடீரென மாயமானதையடுத்து விடுதி உரிமையாளரால் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் உடனடி விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் ஆள்கடத்தல் முயற்சியை முறியடித்துள்ளனர்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளை ஜோர்தான் பொலி ஸார் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.




# தேரரிடம் கொள்ளை எட்டுப் பேர் சிக்கினர்

அம்பாறை - பொத்துவில் பகுதியில் அமைந் துள்ள மகா விகாரையின் பௌத்த தேரர் ஒரு வரைத் தாக்கி அவரிடமிருந்து பணம் மற்றும் தொலைபேசியை கொள்ளையிட்டுச் சென்றவர் கள் எனக் கருதப்படுவோர் சிக்கியுள்ளனர்.

பொத்துவில் - முஹுது மகா விகாரையின் காட்டுப் பகுதியில் உள்ள பாறைக் குகை ஒன் றில் தியானம் செய்து கொண்டிருந்தபோதே தேரரிட மிருந்து 57 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கையடக் கத் தொலைபேசி என்பன கொள்ளையிடப்பட்டுள் ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொள்ளையிட்டுச் சென்றவர்கள் என்று கூறப்படும் எட்டுப் பேரை சந்தேகத்தின் பேரில் பொத்துவில் பொலிஸார் கைது செய்துள் ளனர்.

கைது செய்யப்பட்ட எட்டுச் சந்தேக நபர்க ளும் பொத்துவில் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களால் கொள்ளையிடப்பட்ட கைத் தொலைபேசி மற்றும் பணத்தை கைப்பற்றிய பொலி ஸார், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# கைதிகள் எண்ணிக்கை இரண்டு மடங்கானது!

## நிரம்பி வழிகின்றன சிறைகள்



இவ்வாண்டின் ஆரம்பத்துடன் ஒப்பிட்டுப் பார்க் கையில், நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளி லும் பல்வேறு வகையான குற்றச் செயல்களுக் காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிக ளின் எண்ணிக்கை 200 வீதமாக அதிகரித்துள்ள தாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

அதனால் நாட்டில் உள்ள சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன.

சிறைச்சாலைகளில் தற்போது 29,000 கைதி கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனச் சிறைச் சாலை ஊடகப் பேச்சாளர் மேலதிக சிறைச் சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித் துள்ளார்.

நாட்டில் காணப்படுகின்ற சறைச்சாலைகளில், 13,241 கைதிகளை அடைத்து வைப்பதற்கு போது மான இடமே காணப்படுகின்ற போதிலும், 10,000 கைதிகள் சிறைக்கைதிகளாகவும், 19,000 கைதி கள் சந்தேக நபர்களாகவும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர் எனச் சிறைச்சாலை ஊடகப் பேச்சா ளர் மேலதிக சிறைச்சாலை ஆணையாளர் சந் தன ஏக்கநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, சிறைச்சாலை புள்ளி விவரங்களின் படி, நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளிலும் சிறைக்கைதிகளின் கூட்ட நெரிசல் சடுதியாக அதி கரித்து வருகின்ற போக்கு காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சிறைக்கைதிகளின் உணவு மற் றும் மருத்துவ தேவைகளுக்காக அதிகளவி லான பணத்தை செலவிட்டு வருவதாகவும் தெரி விக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹரியானா கலவரத்தில் 6 பேர் உயிரிழப்பு: டில்லியிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு!

ஹரியாணாவில் கடந்த திங்கள் கிழமை வெடித்த மதக் கலவரத்தைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

பொலிஸார் இதுவரை 116 பேரை கைது செய்துள்ளனர். அத்துடன், 41 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையில், ஹரியானாவில் நடந்த வகுப்புவாத வன்முறையானது, தலைநகர் டில்லியில் இருந்து 20 கிலோ மீற்றர் தள்ளியுள்ள குருகிராம் வரை எட்டியுள்ளது. அங்கு கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்ற வன்முறை யில் பல கடைகளுக்கு தீ வைக்கப்பட்டன. இதன் காரணமாக டில்லியிலும் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தால் அதிகளவில் பாதிக் கப்பட்ட குருராமின் சோஹ்னா பகுதியில் அனைத்து அரசு மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப் பட்டுள்ளது.

இதேவேளை, ஹரியனாவின் நு பகுதியில் இடம்பெற்ற வன்முறை-




யக் கண்டித்து தலைநகர் டில்லியில் உள்ள மெட்ரோ தொடருந்து நிலையம் அருகே வி.எச்.பி. மற்றும் பஜ்ரங் தளம் அமைப்புகள் கண்ட போராட்டத் துக்கு அழைப்பு விடுத்துள்ளதால் டில் லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள் ளது.

மேவாட் பகுதியில் இடம்பெற்ற வன்முறையைக் கண்டித்து விஸ்வ இந்து பரிஷித் அமைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. மேலும், வலதுசாரி அமைப்புகளான விஸ்வ இந்து பரிஷித் மற்றும் பஜ்ரங் தளம் அமைப்புகள் மானேசர் பகுதியில் உள்ள பீசம் மந்திரில் மகா பஞ்சாயத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

## மணிப்பூர் கலவரம்:

# 14 ஆயிரம் மாணவர்கள் இடப்பெயர்வு!

மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் காரணமாக 14 ஆயிரத்துக்கும் மேற் பட்ட பாடசாலை மாணவர்கள் வேறு இடத்துக்கு இடம்பெயர்ந்துள்ளனர் என இந்திய மத்திய கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்த தகவலை மாநிலங் களவையில் மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் அன்னப்பூர்ணா தேவி எழுத்து பூர்வமாக தெரிவித்தார். இதில் சுமார் 93 சதவீதம் மாணவர்கள் அருகாமையில் உள்ள பாடசாலைகளில் சேர்ந்துள்ளனர் என அமைச்சர் தெரிவித் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் இணை அமைச்சர் அன்னப்பூர்ணா தேவி மேலும் தெரிவிக்கையில், மணிப்பூரில் நிலவும் சூழல் காரணமாக சுமார் 14 ஆயிரத்து 763 பள்ளி செல்லும் மாணவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்த மாணவர்கள் ஏனைய பாடசாலைகளில் இணைப்பதற்கான செயல்முறையை எளிதாக்கும் வகையில் அனைத்து நிவாரண முகாம்களுக்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மாணவர்களை தங்கி யுள்ள இடத்துக்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் இலவசமாக இணைத் துக்கொள்ளப்படுவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அனைவரையும் பொலிஸாரால் பாதுகாப்பது சாத்தியமில்லை!

**- ஹரியானா முதல்வர் வேண்டுகோள்**

ஹரியானா மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவரையும் பாதுகாப்பது பொலிஸாரால் சாத்தியமில்லை என அந்த மாநிலத்தின் முதல்வர் மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் அமைதி காக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்களிடையே நல்லுறவும், நட்புறவும் அவசியம் எனவும் 2 லட்சம் மக்களுக்கு 50 ஆயிரம் பொலிஸார் மாத்திரமே உள்ளனர் என்றும் ஹரி யானா முதல்வர் தெரிவித்துள்ளார்.

இந்த வன்முறைக்கு காரணம் என சொல்லப்படும் மோனு மனேசர் மீது ராஜஸ்தான் மாநிலத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ஹரியானா அவர்களுக்கு உதவ தயாராக உள்ளது. அவர் குறித்து அந்த மாநில பொலி ஸார் தேடுதல் மேற்கொண்டுள்ளனர்.

சி.சி.டி.வி காட்சிகளின் அடிப் படையில் வன்முறை தொடர்பாக இதுவரை சுமார் 116 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 190 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பா.ஜ.கவில் இணைந்தார் நடிகை ஜெயசுதா




நடிகையும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஜெயசுதா பா.ஜ.கவின் தெலங்கானா மாநில தலைவர் கிஷன் ரெட்டி முன்னிலையில் அந்த கட்சியில் இணைந்தார்.

தமிழ் திரையுலகில் 1970 ஆம் ஆண்டுகளில் அறிமுகமானவர் நடிகை ஜெயசுதா. இவர் இயக்குநர் பாலசந்தரின் 'அரங்கேற்றம்', 'சொல்லத்தான் நினைக் கிறேன்', 'நான் அவனில்லை', 'அபூர்வ ராகங்கள்' உட்பட பல படங்களில் நடித் துள்ளார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி உள்பட பல்வேறு மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்துள்ள இவர் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் செகந்திராபாத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் பின் கடந்த 2014 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

# ரஷ்யப் படைகளால் சித்திரவதை: உக்ரைன் கைதிகளின் அவலநிலை!

ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட தெற்கு உக்ரைனில் உள்ள தற்காலிக தடுப்பு மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏராளமான கைதிகள் சித்திரவதை மற்றும் பாலியல் அத்துமீறலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச நிபுணர்கள் குழு ஒன்று குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யா தனது அண்டை நாடான உக்ரைனை ஆக்கிரமித்தது. இதனை எதிர்த்து அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் உதவியுடன் உக்ரைன் கடுமையாகப் போரிட்டு வருகிறது.

போர் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில், ரஷ்யா மீது புதிய குற்றச்சாட்டை உக்ரைன் வைத்துள்ளது.

ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் இருந்த கெர்சன் பகுதி உக்ரைனால் மீட்கப் பட்டுள்ளது.

இங்குரஷ்யாவால்அடைக்கப்பட்டிருந்த போர் கைதிகளிடம் உக்ரைன் விசாரணை நடத்தியுள்ளது. அந்த அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.



அறிக்கையின் படி, உக்ரைன் அதிகாரிகளுடன் இணைந்து மனித உரிமைச் சட்டங்களுக்கான குளோபல் ரைட்ஸ் கம்ப்ளையன்ஸ் எனும் சர்வதேச அமைப்பின் மொபைல் ஜஸ்டிஸ் டீம் குழுவினர் செயலாற்றியுள்ளார்.

இதில் கைதிகளை ரஷ்யா உடல் ரீதியான சித்திரவதைகளுக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் ஆளாக்கியுள்ளனர் என இந்த குழு கண்டுபிடித்துள்ளது.

சுமார் 97 ஆயிரம் போர் குற்றச்சாட்டு அறிக்கைகளை உக்ரைன் ஆராய்ந்து ரஷ்யாவைச் சேர்ந்த 220 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட உக்ரைன் நாட்டவர்களை பல்வேறு விதமாக ரஷ்யர்கள் சித்ரவதை செய்துள்ளனர்.

கைதிகளை அடிப்பது, அவர்களின் உடலில் மின்சாரம் பாய்ச்சுவது, அவர்களின் பிறப்புறுப்பில் மின்சாரம் செலுத்துவது மற்றும் ஒரு கைதி பாலியல் கொடுமை செய்யப்படுவதை ஏனைய கைதிகளைப் பார்க்க வைப்பது போன்ற துன்புறுத்தல்களைக் கையாண்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உக்ரைனின் முக்கிய பகுதிகள் மீது ரஷ்யா மீண்டும் ட்ரோன் தாக்குதல்!

உக்ரைனின் ஒடேசா பிராந்தியத்தின் தெற்கில் உள்ள துறைமுகம் மற்றும் தொழில்துறை வசதிகள் மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதலை முன்னெடுத்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்மைல் பகுதியை இலக்கு வைத்து ரஷ்ய ட்ரோன்கள் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என உக்ரைன் விமானப் படை எச்சரித்திருந்தது.

இதில் தானிய சேமிப்பு கிடங்குகள் பல சேதமடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.



தானிய சேமிப்பு கிடங்குகள் பல சேதமடைந்துள்ளதாக கூறப்படும் நிலையில், தற்போது அவசர சேவைகள் பிரிவு தாக்குதல் நடந்த பகுதியில் பணியாற்றி வருவதாக அதிகாரிகள் தரப்பு தெரிவித்துள்ளது.

முன்னதாக, மாஸ்கோ நகரில் உக்ரைன் தரப்பு ட்ரோன் தாக்குதலை மேற்கொண்டிருந்த நிலையில், அதற்கு பழி தீர்க்கும் வகையில் ரஷ்யா தொடர் தாக்குதலை நடத்துவதாக கூறுகின்றனர்.

## ஜப்பானில் ‘கானுன்’ புயல் தாக்கம்: 500 விமான சேவைகள் இரத்து!

ஜப்பானின் தெற்கு பகுதியில் உருவாகியுள்ள கானுன் என்ற புயல் காரணமாக அங்கு 500 இற்கும் அதிகமான உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால் உள்நாடு மற்றும் வெளி நாடுகளுக்கு செல்ல வேண்டிய பயணிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு, 198 கிலோ மீட்டர் வேகம் வரை வீசும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், குறித்த பகுதியில் பலத்த மழை பெய்வதற்கான சாத்தியம் காணப்படுவதுடன், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நைஜரிலிருந்து பிரான்ஸ் பிரஜைகள் வெளியேற்றம்!

நைஜர் நாட்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதில் போராட்டங்கள் வலுப்பெற்று வருவதைத் தொடர்ந்து, பிரான்ஸ் அதன் குடிமக்களை அங்கிருந்து வெளியேற்ற தொடங்கியுள்ளது.

260 பேருக்கும் மேற்பட்ட பிரான்ஸ் குடிமக்களை ஏற்றிக் கொண்டு, அந்நாட்டின் தலைநகரமான நியாமியில் இருந்து முதல் விமானம் நேற்று புறப்பட்டுள்ளது.

பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளின் குடிமக்களைக் கொண்ட அந்த விமானம், நேற்று பாரிசில் தரையிறங்கியுள்ளது.

நைஜரின் வான்வெளி மூடப்பட்டுள்ளதால், அந்த நாட்டில் தமது மக்கள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு, அங்கிருந்து அவர்களை வெளியேற்றுவதாக பிரான்ஸ் அரசாங்கம் கூறியுள்ளது.

எஞ்சியிருக்கும் பிரான்ஸ் நாட்டவர்களை வெளியேற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும், நியாமியிலுள்ள விமான நிலையத்திற்குச் செல்லும்படியும் பிரான்ஸ் அரசாங்கம் தமது குடிமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.08.2023



## மேஷம்

இன்று நம்பிக்கை நிறைந்த நாள். உங்கள் இலக்குகளை அடைய தைரியம் மற்றும் உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொத்ததில் வளர்ச்சி காணப்படும். இது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

உங்கள் பணிகளை புத்துணர்ச்சியுடனும் உற்சாகமுடனும் மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். உங்கள் நிதிநிலை உயரும்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான மன நிலையுடனும் காணப்படுவீர்கள்.



## ரிஷபம்

எதிர்மறை விளைவுகளைத் தடுக்க இன்று எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கண்களில் எரிச்சல்கள் ஏற்படலாம்.



## மிதுனம்

இன்று அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இதனால் செயல்கள் சுமூகமாக நடக்கும். அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்த்திடுங்கள்.

உங்கள் கீழ் பணிவோருடன் மோதல்கள் காணப்படும். பணிகள் சுமூகமாக நடக்க பதட்டத்தை தவிர்த்தல் நல்லது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கைத் தவிர்த்திடுங்கள். இந்த உணர்வால் உறவில் மகிழ்ச்சி நிலவாது.

செலவுகள் அதிகமாவதைக் காண்பீர்கள். நிதியில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க உணவில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.



## கடகம்

இன்று அதிக முயற்சிகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் உறுதி மூலம் வெற்றியை அடைய இது உதவும். உங்கள் நம்பிக்கை மூலம் நீங்கள் உயர் நிலையை அடைவீர்கள்.

பணியிடச் சூழலில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும்.

உங்கள் துணையுடன் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பீர்கள். சமநிலை அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் நிதி சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகளை நீங்கள் திட்டமிட இயலும்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதில் காணப்படும் திருப்தி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.



## சிம்மம்

நீங்கள் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பொறுப்புக் காரணமாக இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.

இன்று அதிக பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சமநிலை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்வுகளை கைவிட வேண்டும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். தற்போதைய நிலைமையை கை-யாள்வதை கடினமாக உணர்வீர்கள்.



## கன்னி

இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மற்றும் பிரார்த்தனை மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம். இதனால் உங்களுக்கு நன்மை விளையும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் எதிர்கொள்வீர்கள். சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் உறவு நல்லுறவாக உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தைப் பாதிக்கும் உணர்வுகளைத் தவிர்க்க வேண்டும். பதட்டமான சூழ்நிலை உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் செய்வீர்கள். பணப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தொண்டை சம்பந்தமான தொல்லைகள் பாதிப்பை அளிக்கும். குளிர்ச்சியான உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.



## துலாம்

கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் பெறலாம். இது தான் இன்று மிகவும் தேவையானதாக இருக்கும். இன்றைய செயல்கள் யாவும் சுமூகமாக நடக்க விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை சரியாக மேற்கொள்ள திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் சிறிது கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள். உங்கள் வருத்தமான மனநிலையை வெளிப்படுத்தாமல் இருப்பதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையான நிதியை உருவாக்க நீங்கள் போராடுவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படும்.



## விருச்சிகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்கள் விருப்பங்களை எளிதில் பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டங்கள் பலனளிக்கும்.

பணியிடச் சூழல் உற்சாகத்தை அளிக்கும். மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் செயல்திறனில் பெருமை கொண்டு வரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை காண்பீர்கள். மகிழ்ச்சி யான விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.08.2023


தனுசு

உங்கள் உணர்வுகளை இன்று கட்டுபடுத்த வேண்டிய நாள். பொறுமை யுடனும் நம்பிக்கையுடனும் இருங்கள். நம்பிக்கை ஒன்றே வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு உங்களுக்கு கிடைகாது.

உங்கள் துணையிடம் நீங்கள் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். நல்ல விளைவுகள் காண எதையும் லேசாக எடுத்துக் கொண்டு சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று விருப்பமான விளைவுகள் ஏற்படும் சூழ்நிலை இருக்காது. தேவையற்ற செலவுகளைச் சந்திப்பீர்கள். இது உங்களுக்குக் கவலையை அளிக்கும்.


கும்பம்

இன்றைய நாளை நீங்கள் சுமூகமாக கழிக்க இயலாது. உங்கள் போக்கில் சோம்பல் காணப்படும். தேவையற்ற குழப்பங்களால் எண்ணங்களில் தெளிவு இருக்காது. எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து நேர்மறை எண்ணம் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்களின் குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

இன்று பண இழப்பு காணப்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். கண்களுக்கு மருத்துவம் மேற்கொள்ள வேண்டும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


மகரம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. நல்ல விளைவுகளைக் காண நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் இருக்கமான பணிகள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து அதிக ஒத்துழைப்பு கிடைக்காது.

உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீண்ட நெடிய வலுவான உறவுப் பிணைப்புக்கு முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். குறைந்த பணத்தில் நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.


மீனம்

இன்று செழிப்பான நாள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று முக்கியமான இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் செயல்திறனுக்கு மேலதி காரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் தரமான பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்து ணர்வு ஏற்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

சிறந்த ஆற்றலும் தேக நிலையும் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக் கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park